ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:3 Issue : 11 July 2021

கோட்டை :3 வாயில்:11 ஜூலை 2021

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ISSN: 2582-399X

# Aran

International e Journal of Tamil Research

ISSN: 2582-399X



## ஆசிரியர் குழு

முனைவர் வாணிஅறிவாளன்
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் பா.வேலம்மாள்
முனைவர் விமலா அண்ணாதுரை
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் *V.*வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் *P.*பாண்டிக்குமார்



## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

## இதழாக்கம்

**பேரா. முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் **(Peer Review)**பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# நன்றி

**அனைவருக்கும் வணக்கம்**

**நமது அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் மூன்றாவது ஆண்டில் (2021) அடி எடுத்து வைக்கின்றது. எங்களுடன் பயணித்த அனைத்து பேராசிரியர் பெருமக்களுக்கும், துறைசார் வல்லுநர்களுக்கும், ஆய்வு மாணவர்களுக்கும் எங்களது பணிவான நன்றியை தெரிவித்துக்கின்றோம். தொடர்ந்து உங்களது ஆதரவை எங்களுக்கு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.நன்றியும் பேரன்பும்.**

*Hi everyone*

*Aran Internaitional e Journal of Tamil Research continuings way into third year(2021) . We area greatful to all the professors,academics and research students who travelled with us. We warmly request you to continue to support us . Thank you with Love.*


**அன்புடன்**

**முனைவர். பிரியாகிருஷ்ணன்**

**நிறுவனர்/பதிப்பாசிரியர்/நிர்வாகஆசிரியர்,**

**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்**

*www.aranejournal.com*

*aranjournal@gmail.com*

*PH: +917299587879*

# அகத்தினுள்


**பத்துப்பாடல்கள் சுட்டும் இசைக் கருவிகள்**
திரு. மதி ஜனனி செந்தூரன்

**குறுந்தொகையில் உவமைச் சிறப்பு**
முனைவர் மு. விஜயலெட்சுமி,

**குறுந்தொகைக் காட்டும் தகையணங் குறுத்தல்**
முனைவர் த.தேவகி

**தமிழரின் கடல் எல்லை தாண்டுதலும், பெண்கடல் செலவு மறுப்பும்**
முனைவர் இரா. ஜெயஸ்ரீ

**கம்பன் விருத்தங்களில்யாப்பு**
முனைவர். ஜெ. கவிதா.

**சிலப்பதிகாரம் காட்டும் சமூகம்**
முனைவர். ரா. ராமேஸ்வரி

**திருக்குறள் காட்டும் பகைவெறி எதிர்ப்பியல் சிந்தனைகள்**
திருமதி சு.சத்யா

**ஆசாரக் கோவையும் அறிவியலும்**
முனைவர் பெ.இராஜலட்சுமி

**ஏலாதி கூறும் வாழ்வியல் அறங்கள்**
முனைவர் க.அலமேலுமங்கை

**அணி இலக்கண நோக்கில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்**
திருமதி.பா.தீபா

**விவிலியமும் சித்தர் இலக்கியமும் கூறும் மனித படைப்பு**
ச.சு.அருள்பிரகாஷ்

**இயேசு பிறப்புக் கதைப்பாடல்கள்**
தா.மதன்



முகப்பு
புகைப்படம் இணையம்
நன்றி

# அகத்தினுள்

**முகம் மலர்தலே விருந்தோம்பலின் முதன்மைப் பண்பு**
முனைவர் க. மங்கையர்க்கரசி

**சிற்பங்கள் காட்டும் கொற்றவை வழிபாடு**
கி. சரவணன்

**கைவல்ய நவநீதத்தில் பிரம்மம் பற்றிய கருத்தியல்கள்**
முனைவர் சயனொளிபவன். முகுந்தன்

**ஞானசம் பந்தரின் வருகையும் திட்டக் குடியும்**
முனைவர் பெ.சுப்ரமணியன்

**இந்துப் பண்பாட்டு மரபில் பெண்கள் நிலை-வடமொழி நூல்களை அடிப்படையாகக் கொண்ட நோக்கு**
கலாநிதி விக்னேஸ் வரிபவநேசன்

**உள்ள வழிபாடுகளே உருவ வழிபாடுகள்**
மு.பெருமாள்

**பிடுங்கி நடப்பட்ட நிலத்தில் முளைக்கத்துடிக்கும் உயிர்ப்பின் பச்சை.. (புகலிடக் கவிதைகளின் செல்தடம் குறித்த ஆய்வு**
பேரா.தெ.வெற்றிச்செல்வன்

**டாக்டர்தா.ஏ.ஞா. அவர்களின் இலக்கியத் திறனாய்வியல் நூலின் ஒட்பநுட்பங்கள்**
முனைவர் வே. விக்னேசு

**நெடுங் குருதி நாவல் காட்டும் களவும் கள்வர்வாழ்வும்**
முனைவர் அ.ரேவதி.

**ஜெயமோகனின் நாவற்கோட்பாட்டு விதிகளும், அவருடைய நாவல்களும் (ஜெயமோகனின் 'நாவல்' இலக்கியத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)**
முருகையா சதீஸ்

முகப்பு
புகைப்படம் இணையம்
நன்றி

# அகத்தினுள்


**தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் கமலாம்பாள் சரித்திரத்தின் முக்கியத்துவம்**
முருகையா சதீஸ்

**தூப்புக்காரி நாவலும் கதைமாந்தர்களும்**
வினோ ராஜ். லா

**இலக்கியங்கள் முன்னெடுக்கும் பொதுமக்கள் நுகர்வுப் போக்கு**
முனைவர் ப. கிருஷ்ணமூர்த்தி.

**தமிழ் மொழி: கற்றலின் தேவையும் கற்பித்தலில் சிக்கலும் - சிலவிவாதங்கள்**
முனைவர் அ.இலட்சுமிதத்தை.

**அழகர் குறவஞ்சியில் இயல் இசைச் சிறப்புகள்**
முனைவர் செ.லலிதாம்பாள்

**சீவகசிந்தாமணி-நடன நோக்கில் விமலியார் இலம்பகம்**
முனைவர் ஜி.ஜே. லீமாரோஸ்

**சிலப்பதிகாரம் கூறும் விலக்குறுப்பும் நடன வடிவமைப்பும்**
முனைவர் கு.சகாயராணி

**THE GREAT EXHIBITION OF THE INDUSTRY AND ART OF ALL NATIONS (LONDON, 1851)**
Dr. S. Purushothaman

**உடுமலை பீரங்கி வார இதழ் - ஓர் ஆய்வு**
முனைவர் ப. கற்பகவள்ளி

**சங்ககாலம் - சேலம் மாவட்டம் ஒருபார்வை**
முனைவர் இரா.ரமேஷ்

**உயிருடன் புதைக்கப்பட்டப் பெண்கள் -தாமரைப் பாக்கம் கல் வெட்டுகள் முன் வைத்து மீள்பதிவு**
முனைவர் பிரியாகிருஷ்ணன்



முகப்பு

புகைப்படம் இணையம்

நன்றி

# தமிழ்



# தமிழரின் கடல் எல்லை தாண்டுதலும், பெண் கடல் செலவு மறுப்பும்

**முனைவர் இரா.ஜெயஸ்ரீ**
உதவிப் பேராசிரியர்
கல்வியியல் துறை
சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

**ஆய்வுச் சுருக்கம்:**

இவ்வுலகம் நீர்நிறைந்த கடல் பரப்பை எல்லையாகக் கொண்டிருக்கிறது. உயர்குடிப் பிறந்தோர் பொருள் தேடிப் போகப் பிரியும் பிரிவு அறநெறி பிறழாத ஒழுக்கமாகக் கருதப்பட்டது. அவ்வாறு பொருள் தேடிச் செல்லும்போது தலைவியை தலைவன் உடன் அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை. அதற்கான காரணங்களை இக்கட்டுரை ஆராய்கிறது.

**திறவுச்சொற்கள்:** பொருள்வயின் பிரிதல், முந்நீர் வழக்கம், கடற்செலவு, ஆண் பெண் ஒப்புமைகள்.

**"மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த**
**தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றிப்**
**பல்புகழ் நிறுத்த பழமையோனே"[1]**

என்ற தொல்காப்பியத்தின் சிறப்புப் பாயிரத்தில் நீர்நிறைந்த கடல்பரப்பை எல்லையாகக் கொண்டிருக்கும் இந்நிலவுலகு என்று குறிப்பிடுகிறார் பனம்பாரனார்.

**பொருள்வயின் பிரிதலும்**
**அவர்வயின் உரித்தே[2]**

என்று பொருள்தேடிப் போகப்பிரியும் பிரிவு அவரவர்க்கு உரிய கடமையாகும் என்று குறிப்பிடும் தொல்காப்பியர், உயர்குடிப் பிறந்தோர் பொருள் தேடிப் போகப் பிரியும் அறநெறி பிறழாத ஒழுக்கநெறி உடையதாகும் என்கிறார்.

## முந்நீர் வழக்கம்

**மகடூ உவொடு இல்லை[3]**

என்று பிரிவில் தலைவியை உடன் அழைத்துச் செல்லும் தலைமகன் கடல்கடந்து செல்லுதல் இல்லை.

முந்நீர் வழக்கம் என்பதற்கு இளம்பூரணர் கப்பல் வழியாகக் கடலில் செல்லும் பிரிவு என்று உரை கூறுவர்.

ஆனால் நச்சினார்க்கினியர் ஓதல், தூது, பொருள் ஆகிய மூன்று நீர்மையால் செல்லும் பிரிவு என்று பொருள் கூறுவார்.

இளம்பூரணர் கருத்துப்படி கடல்வழியாக மகளிரைக் கூட்டிச் செல்லும் வழக்கம் இல்லாவிடினும் தரைவழியாகச் செல்லும் பிரிவில் தலைவியைக் கூட்டிச் செல்லும் வழக்கம் உண்டு.

**பண்டைய தமிழரும், கடலும்:**

**மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்[4]**

என்று பழந்தமிழர் நிலத்தைப் பிரித்து ஆராய்ந்து இருந்தனர். இதற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஒவ்வொரு இடத்திலும் காணப்பட்ட தரையின் தோற்றம், காலநிலை, தாவரங்கள், விலங்குகள், மனிதச் செயல்பாடுகள் இவற்றின் அடிப்படையில் நிலங்களைப் பிரித்திருந்தனர் இவை ஒவ்வொன்றும் தனித்தனி உலகங்களாகவே காட்சியளிக்கின்றன.

**நெய்தல் நிலம்:**

தமிழகத்தைச் சுற்றியுள்ள கடற்கரை நிலப்பரப்பு நெய்தல் நிலமாகும். இங்கு வாழ்ந்த மக்கள் பரதவர், நுளையர், வலைஞர் என அழைக்கப்பட்டனர்.

மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், முத்துக்குளித்தல் போன்றவை இங்கு வாழ்ந்த மக்களின் தொழில்களாக அமைந்திருந்தன.

கடற்கரைப் பகுதியான இந்நிலத்தில் கடல் வழியாக அயல்நாடுகளுடன் வாணிபம் நடைபெற்றது. தமிழகத்து மிளகு முதலிய நறுமணப் பொருள்களுக்கும் முது;துக்களுக்கும் ஈடாகப் பொன்னையும், மதுவையும் பண்டமாற்றாகப் பெற்றுச்செல்ல கிரேக்கரும், உரோமானியரும் மரக்கலங்களில் வந்து சென்றதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. எளிய மக்கள் குடிசைகளில் வாழ்ந்து வந்தாலும் செல்வச் செழிப்பாக வாழ்வைக் கழித்தனர். வாணிபம் வளர்ச்சியுற்றதால் துறைமுகப் பட்டினங்கள், நகரங்கள், வளர்ச்சி பெற்றன. சேரரின் துறைமுகங்களான முசிறி, தொண்டி, மாந்தை, நறவு ஆகியன விளங்கின. சோழரின் துறைமுகப் பட்டினங்களாகக் காவிரிப்பூம்பட்டினம், நாகப்பட்டினம், பொதுகை அல்லது அரிக்கமேடு ஆகியன விளங்கின. கொற்கை, சாலியூர், சாயல் ஆகியன பாண்டியரின் துறைமுகங்களாகும்''[5]

தமிழ் இலக்கியங்களில் மரக்கலங்களைக் குறி;க்கும் சொற்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன.

தமிழர் பழங்காலம் முதலே கடற்செலவு மேற்கொண்டுள்ளனர். சங்ககாலத் தமிழர் நாவாய், வங்கம், என்னும் கப்பல்களைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்து தமக்கு வேண்டிய போர்க்குதிரை முதலான பொருள்களை வாங்கி வந்து இறக்குமதி செய்து கொண்டனர். நாவாய் என்பது கடல் வாணிபம் செய்யப் பயன்படுத்தப்பட்ட மரக்கலம். வாயில் இருக்கும் நாக்குப் போன்ற அடியமைப்பினைக் கொண்டு விளங்குவதால் இதனை நாவாய் என்றனர். அக்காலத்தமிழர் பயன்படுத்திய நாவாய், வங்கம் ஆகியவை பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் உள்ளன.

தமிழ் இலக்கியங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட சொற்கள் மரக்கலங்களைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளன. அவை மரக்கலத்தோடு தொடர்புடையவையாக அகர முதலிகளிலும், நிகண்டுகளிலும் விளக்கப்பட்டுள்ளன.

அம்பி, புணை, திமில், நாவாய், வங்கம், கலம், தோணி, ஓடம், படகு, மதலை, மிதவை, தெப்பம், கப்பல் போன்ற சொற்கள் மரக்கலங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளன.

இவையன்றியும் அம்படலம், ஆன் செல்கை, ஆட்டு, ஆணம், உடுப்பம், ஈடல், ஒட்டியாற்படவு, ஓங்கல், கட்டுத்தோணி, கட்டுப்படகு, கட்டுப்பாணை, கட்டுப்புணை, கட்டுமரம், மரம், கடத்து, கடவுமரம், கள்ளக்கப்பல், கரைவலை தோணி, கலப்புறுத்தோணி, கூட்டுப்பட்டு, கைப்பரிசு, கொடிக்கப்பல், கோடிக் கரையாந்தோணி, கோல், கோலம், சங்கடம், சட்டித்தோணி, சிறகுவட்டி,

சுறுப்பு, தந்தாரம், தள்ளை, தண்ணுத்தோணி, தண்ணுவட்டை, தாவடித்தோணி, துறைத்தோணி, தைலமரம், தொடுவை வள்ளம், தொள்ளம், தொள்ளை, நடைச்சலங்கு, நீர்ம்புனை, நாவுகா, பங்கிலம், பட்டிமாரி, பள்ளவோடம், பள்ளியோடம், பாசாங்கம், பெரியமரம், மரக்கோவை, மள்ளு, யாடணம், வள்ளம் என்றவாறும் சொல்லப்படும்.[6] ((*Maritime History of South India, G.Victor Rajamanickam, V.S.Arulraj, Tamil University, Thanjavur*).

கப்பல்கட்டுவது, பராமரிப்பது, கப்பல் செலுத்துவது ஆகிய செயல்பாடுகளில் தமிழர்கள் தொழில்நுட்பத்தோடும், ஈடுபாட்டோடும் விளங்கினர் என்பது பண்டைய இலக்கியங்கள் வழி அறியப்படுகின்றது.

எனவே கடற்பயணம் என்பதில் பழந்தமிழர் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பது அறியப்படுகின்றது.

**தொல்காப்பியம் சுட்டும் ஆண், பெண் இயல்புகள்:**

ஆணுக்கும், பெண்ணுக்கும் பிறப்பு, குடிமை, ஆண்மை, வயது, உருவு, நிறுத்தகாம வாயில், நிறை, அருள், உணர்வு, திரு என்னும் பத்து ஒப்புமைகளைக் கூறுகிறது தொல்காப்பியம்.

“பெருமையும் உரனும் ஆடுஉ மேன”[7] என்று ஆணுக்கு பெருமை, உரன் என்று இரண்டு மட்டும் கூறி பெண்ணுக்கான இயல்புகளாக மிகப்பல வரையறுக்கப்படுகின்றன.

செறிவு, நிறைவு, செம்மை, அறிவு, அருமை, அச்சம், மடம், நாணம், உயிரினும் நாணினும் சிறந்த கற்பு என்பன பெண்ணுக்குக் கூறப்படும் இயல்புகளாகின்றன.

“கடிமனை நீத்த பாலாக ஆண் பிற பெண்டிருடன் செல்கிறான். இங்ஙனம் சென்று மீ;ம் ஆடவனின் சோர்வு காத்தல் கடன் என்று சமூக நடைமுறை விதிக்குப் பெண் உட்படுகிறாள். பெண் ஊடல் கொண்டாலும் தொடரும் இல்லற மாசு நீங்க பரத்தமை தோய்ந்தவருடன் வாழத் துணிகிறாள்.

பெண்ணுக்குக் கிட்டாத சமத்துவமாக ஆண் இறந்த பின்னும் தொடர்கிறது சில சூழல். ஆணையிழந்த பெண் தனிமை வருத்தமாக தாபதநிலை, முதுபாலை, என்பதோடு தற்கொண்டானின் பிணத் தலையைத் தன் முகம் சேர்த்து முட்டி மோதி உடன் இறக்கும் நிலையும் நிகழ்வனவாயின.” என்கிறார் ஆய்வாளர்.பு.பாலாஜி.[8]

ஒரு சமுதாயத்தில் மக்களிடையே காணப்பெறும் நம்பிக்கைகள் கருதத்தக்கன. சமூகத்தின் பண்பாட்டு மரபினை அறிவிக்க வல்லன. ஒவ்வொரு சமுதாயத்திற்கும் இவை தனித்தன்மை உடையனவாக விளங்குகின்றன.

பெண்கள் கடல் பயணத்திலிருந்து விலக்கப்பட்டமைக்கு கீழ்க்கண்ட காரணங்களைக் கூறலாம்.

1. பரந்து விரிந்த கடல் தரும் அச்சம்.
2. கடல் பயணத்தின்போது நேரும் ஆபத்துக்கள், துயரங்கள்.
3. பகை காரணமாக பிரிவு நேரும்போது அதில் ஏற்படும் ஆபத்துக்களைக் கருதியிருக்கலாம்.
4. கடல் என்றாலே துன்பந்தரும் இரங்கலுக்கு உரியது என்ற கருத்து முன்னோர் நெஞ்சில் இருந்திருக்கலாம்.

கடல் பேரழிவால் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகள், உயிர்கள் இழந்தமை, கடல்கோள்கள் போன்றவற்றால் அவல நிலை எய்தியிருக்கலாம்.

**ஆய்வு முடிவுகள்:**

1. சங்ககால மக்கள் கடல் வாணிகத்தில் சிறந்திருந்தமை சுட்டப்பட்டுகிறது.
2. பெண்ணுக்குக் கடல் கடத்தல், மடலேறுதல் கூடாது என்பதால் பெண் குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டும் வாழ்ந்தாள் என அறியப்படுகிறது.
3. பால் ஏற்றத்தாழ்வு என்பது அக்காலச் சமுதாயத்தில் நீக்கமுடியாது இருந்தது.
4. பெண்ணுக்கான கட்டற்ற சுதந்திரம் மறுக்கப்பட்டிருக்கிறது.
5. அவர்களுக்கான எல்லைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.
6. தொல்காப்பியம் தவிர வேறு அக இலக்கணங்களில் இக்குறிப்பு காணப்படவில்லை.
7. சங்க இலக்கியங்கள் தவிர பிற்கால இலக்கியங்களும் இதுகுறித்துப் பேசவில்லை.
8. கடந்த நூற்றாண்டுகளில் பெண்கள் முதல்முதலாக தங்கள் கணவருடன் செல்லும்போதுகூட பல்வேறு குறுக்கீடுகள் இருந்திருக்கலாம்.
9. தற்கால வாழ்வியல் சூழலில் பெண்களுக்கான முழு உரிமை, கல்வி, பொருளாதாரம், சமூகக் காரணங்களால் இவ்வாய்ப்பு கிடைத்துள்ளது.

**ஆய்வுக்குப் பயன்பட்ட நூல்கள்:**


1. பி.டி.சீனிவாச அய்யங்காரின் தமிழர் வரலாறு, தமிழாக்கமும், திறனாய்வும்: புலவர்.கா.கோவிந்தன், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-18. முதல் பதிப்பு, 2000.
2. தொல்காப்பியச் சிந்தனைகள், ம.கோ.விக்டர், பூகரம், நூல்வெளியீட்டு நிறுவனம், அரியலூர், இரண்டாம் பதிப்பு, 2007.
3. தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு நாவலர் சோமசுந்தர பாரதியார் நினைவுச் சொற்பொழிவு, சொற்பொழிவாளர்: பேராசிரியர் க.வெள்ளைவாரணர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987.
4. தமிழியல் ஆய்வு, முனைவர் இரா.காசிராசன், முனைவர் தூ.சேதுபாண்டியன், முனைவர் மு.மணிவேல் (ப.ஆ), பு.பாலாஜி (க.ஆ). ஞாலத்தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்றம், மதுரை, மு.ப.1996.

---

1. *தொல்காப்பியம், சிறப்புப்பாயிரம், (12-15)*
2. *தொல். அகத். 35.*
3. *தொல். அகத். 37.*
4. *தொல்.பொருள். 5.*
5. *தமிழர் வரலாறு, புலவர்கள். கோவிந்தன், ப.52.*
6. தொல். பொருள்.95.
7. தமிழியல் ஆய்வு, ப.55.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ISSN: 2582-399X


## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

ஆண்டு 2021, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் அக்டோபர் - 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜனவரி இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.


www.aranejournal.com

✉ aranjournal@gmail.com

✆ 72995 87879